<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஐரோப்பிய நாடுகளுக்கு டீசல் ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- நேபாள பெருவெள்ளத்தில் அனல்மின் நிலையங்களில் சிக்கியவர்களை மீட்க இந்தியா-சீனா குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.
- ஜார்க்கண்ட் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் Sudivya Kumar Sonu இன்று மாரடைப்பால் காலமானார்.
- ஹோர்முஸ் நீரிணை வழியாக சென்ற 3 எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.
- இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் Mansi Sing சீனாவின் Wen Jang Xu-வை எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

ஐரோப்பிய நாடுகளுக்கு டீசல் ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

ரஷ்யா மற்றும் அமெரிக்காவிலிருந்து எண்ணெய் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவிடமிருந்து நாள்தோறும் 2 லட்சம் பீப்பாய் டீசல் இறக்குமதி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Bab-El-Mandeb வழியாக இந்தியா ஐரோப்பிய நாடுகளுக்கான 60 சதவீத டீசல் தற்போது வழங்கி வருகிறது.

இந்தியாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து இந்த டீசல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வருடத்தில் 258 மில்லியன் டன் எண்ணெய் சுத்திகரிப்பு திறனுடன் உலகிலேய நான்காவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

<<<<<>>>>>

நேபாள பெருவெள்ளத்தில் அனல்மின் நிலையங்களில் சிக்கியவர்களை மீட்க இந்தியா-சீனா குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு நிலைமையை அந்நாட்டு நிர்வாகம் கண்காணித்து வருகிறது.

நேபாளத்தில் கடந்த மாதம் 26-ம் தேதி ஏற்பட்ட பெருவெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 344 ஆக அதிகரித்துள்ளது.

காணாமல் போன ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 13 ஆயிரத்து 100-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

அடையாளம் தெரியாத 453 பேரின் டிஎன்ஏ மாதிரிகள் நேபாள காவல்துறையினர் பரிசோதனைக்காக சேமித்து வைத்துள்ளனர்.

மேலும், ஆயிரத்து 270 சடலங்கள் குறித்த விவரங்கள் நேபாள காவல்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நேபாள பெருவெள்ளத்தின் மீட்பு பணி மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 7 ஆயிரத்து 912 காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>

நேபாள பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லும் ஊடகவியலாளர்கள் அரசு பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று நேபாள அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக நேபாள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஜார்க்கண்ட் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் Sudivya Kumar Sonu இன்று மாரடைப்பால் காலமானார்.

Giridih மருத்துவமனையில் இதயநோய் காரணமாக அனுமதிக்கப்பட்ட அவர் இன்று அதிகாலை காலமானதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

அவரது மறைவுக்கு ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

மருந்து ஒழுங்குமுறை ஆணையம் புதுதில்லியில், பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக விற்பனை செய்யும் மருந்தகங்களில் சோதனை மேற்கொண்டுள்ளது.

மத்திய மருந்துகள் தரகட்டுப்பாட்டு அமைப்பு தில்லி காவல்துறை ஒருங்கிணைந்து பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசு சான்றிதழ் பெறாமல் செயல்படும் மருந்தகங்களின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு மருத்துவமனைகளில் அங்கீகாரம் இல்லாத நோய் தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதை கண்டறிந்துள்ள நிலையில், அரசு அங்கீகாரம் பெற்ற மருந்தகங்களிலிருந்து மருந்துகள் வாங்க வேண்டும் என்று மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஹரியானா மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசின் திட்ட பயனாளிகளின் பட்டியல் தயார் செய்ய அம்மாநில முதலமைச்சர் திரு. Nayab Singh Sani உத்தரவிட்டுள்ளார்.

இதன் மூலம் அனைவருக்கும் மத்திய அரசின் நலத்திட்டங்களின் பலன் சென்றடைய வழிவகை செய்யும் என்று அவர் கூறியுள்ளார்.

வரும் 17 ஆம் தேதி முதல் அக்டோபர் 17 ஆம் தேதி வரை நடைபெற உள்ள சேவை இயக்கம் நிகழ்ச்சியில் அரசு திட்டங்கள் மக்களை சென்றடைய உறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி 25 ஆண்டுகளாக பொது சேவையில் ஈடுபட்டதை கொண்டாடும் வகையில் சேவை இயக்கம் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் சாகர் மாவட்டத்தில் கள்ளச்சாரயம் அருந்தி 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

Ghooghar, Naoraj, Baraj கிராமங்களை சேர்ந்தவர்கள் மது அருந்தியதையடுத்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<>>>>>

ஹோர்முஸ் நீரிணை வழியாக சென்ற 3 எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நாட்டுடன் இணைந்த எண்ணெய் நிறுவனங்களின் இந்த கப்பல்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் கூறியுள்ளது.

ஓமன் கடற்பகுதியில் ஈரானின் 3 எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹோர்முஸ் நீரிணை வழியாக செல்லும் அனைத்து கப்பல்களுக்கும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னதாக, ஈரான் கப்பல்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

எகிப்தில் தொலைக்காட்சி தொகுப்பாளர் Sarah Khalifa உட்பட 12 பேருக்கு போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த எகிப்து நீதிமன்றம் போதைப்பொருட்களை இறக்குமதி செய்து, புழக்கத்தில் விட்டதாக இவர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கூறியுள்ளது.

எகிப்து சட்டத்தின்படி முஃதியின் மதரீதியான ஒப்புதலை பெற்று இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சர்வதேச குழந்தை திருமண எதிர்ப்பு நாள் ஐ.நா.சார்பில் நவம்பர் 27 ஆம் தேதி கடைப்பிடிப்பதற்கான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்துள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒருமித்த கருத்துடன் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்பட்டது.

Sierra Leone நாடு கொண்டுவந்துள்ள இந்த தீர்மானத்துக்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

<<<<<>>>>>

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பாக சுற்றுலா மற்றும் தொழில் துறையை இணைப்பதற்கான சர்வதேச மாநாடு நாளை தொடங்கி வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது.

*Latvia நாட்டை சேர்ந்த Vidzama பல்கலைக்கழகம் போர்ச்சுகல் நாட்டை சேர்ந்த De Setubal கல்வி நிறுவனம், புதுச்சேரி பல்கலைக்கழகம், ஹைதராபாத் டாக்டர் YSR சுற்றுலா கல்வி கழகம் இணைந்து இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.*

*புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில், கர்நாடாக மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் Battu Sathyanarayana, புதுச்சேரி உயர்கல்வித்துறை செயலர் ஸ்ரீ முகமத் அபீத் உள்ளிட்டோர் உரையாற்றுகின்றனர்.*

*<<<<<>>>>>*

*தொடர் கனமழையால் தலைநகர் தில்லியில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*

*இன்று காலை முதல் தில்லி மற்றும் தென்மேற்கு உத்தரப்பிரதேசத்தில் கனமழை பெய்து வருவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, கிழக்கு ராஜஸ்தான், மத்தியப்பிரதேஷ், உத்தரப்பிரதேஷ், உத்தராகாண்ட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*தில்லியின் பல்வேறு இடங்களில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் சாலைப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.*

*மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை முதலமைச்சர் ரேகா குப்தா நேரில் பார்வையிட்டார்.*

*<<<<<>>>>>*

*உத்தரகாண்ட் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர் கனமழை பெய்து வருகிறது.*

*ருத்ர ப்ரயாக்கில் கனமழை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*

*அலக்னந்தா, மந்தாகினி ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.*

*தாழ்வான பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>*

*சிக்கிமில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக Naga-Tosa சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.*

*Theng சுரங்கத்திற்கு அருகே நிலச்சரிவு ஏற்பட்டதால் Teesta, Chyakoong ஆறுகளில் பாறைகள் வீழ்ந்து நீரோட்டம் பாதிக்கப்பட்டுள்ளது.*

*இதனால் உயிர் சேதமோ, பொருள் சேதமோ ஏற்படவில்லை என்று Mangan மாவட்டம் தெரிவித்துள்ளது.*

*ஆற்றின் கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>*

*சீனாவில் Jian நகரில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் 2 பேர் உயிரிழந்தனர்.*

*காணாமல் 10-க்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.*

*Saudal சூறாவளியை தொடர்ந்து ஏற்பட் கனமழையால் Jiangxi மாகணத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.*

*640-க்கும் மேற்பட்டோர் ட்ரோன் உள்ளிட்ட நவீன எந்திரங்களுடன் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.*

*ஐந்தாயிரத்து 300-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*<<<<<>>>>>*

*இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் Mansi Sing சீனாவின் Wen Jang Xu-வை எதிர்கொள்கிறார்.*

*<<<<<>>>>>*

*சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – Chirag Shetty இணை சீனாவின் He Ji Ting- Ren Xiang இணையை எதிர்க்கொள்கிறது.*

*Shenzhen-ல் இப்போட்டி பிற்பகலில் நடைபெறுகிறது.*

*<<<<<>>>>>*

*ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 11-1 என்ற கோள் கணக்கில் மலேசியாவை வென்றது.*

*<<<<<>>>>>*